பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 08 வியாழக்கிழமை 23.07.2020 கதிர் 127

## குடாநாட்டில் இதுவரை 105 முறைப்பாடுகள்

யாழ். மாவட்டத்தில் இதுவரை 105 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள் ளன என மாவட்ட தெரிவத்தாட்சி அலு வலர் க. மகேசன் தெரிவித்தார்.

யாழ்.தேர்தல் மாவட்டத்தின் தற் போதைய நிலைமைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு இன்று யாழ். மாவட்ட செய லகத்தில் இடம்பெற்றது.

2

## கறுப்பு ஜூலை நினைவு இன்று யாழ். பல்கலையில்



யாழ்ப்பாணம், ஜூலை 23

கறுப்புஜூலையின் 37ஆம் ஆண்டுநினை வேந்தல் நிகழ்வு இன்று யாழ். பல்கலைக் கழகத்தில் இடம்பெற்றது.

2

## ‘மொட்டு’வின் புதிய ஆட்சியில்

# மூவின மக்களுக்கும் சமவுரிமை நிச்சயம்!

## மஹிந்த திடசங்கற்பம்



நாட்டில் வாழும் மூவின மக்களுக்கும் சமவு ரிமை உள்ளது. இதை ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணி தலைமையிலான எமது புதிய அரசில் உறுதிப்படுத்துவேன்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரி வித்தார்.

2

## கிளிநொச்சி விபத்தில் முதியவர் உயிரிழப்பு!

கிளிநொச்சி, ஜூலை 24

கிளிநொச்சி, ஏ-9 நெடுஞ்சாலையில் விபத் தில்சிக்கிப்படுகாயம் அடைந்த முதியவர்சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இவ்விபத்து இன்று வியாழக்கிழமை முற் பகல் 11.30 மணியளவில் இடம்பெற்றது.

சைக்கிளில் பயணித்த முதியவர் வீதியைக் கடக்க முற்பட்டபோது

2

## தமிழர் பிரதேசங்களிலேயே தமிழர்களை சிறுபான்மையினர் ஆக்குவதற்கு முயற்சி

சத்தியலிங்கம் குற்றச்சாட்டு

வவுனியா, ஜூலை 23

வன்னி தேர்தல் தொகுதி உட்பட தமிழர் பிரதேசங்களில் தமிழர்களின் இனப் பரம்பலையும் இன விகிதாசா ரத்தையும் மாற்றி இந்த பிரதேசத்தில் ஆண்டாண்டு காலமாக ஆண்டு வரு கின்ற தமிழர்களை சிறுபான்மையின ராக்கும் செயற்பாடுகள் இடம்

2

## பிற்பகல் 3.30 மணி வரை பாடசாலை வகுப்புக்கள்

கொழும்பு, ஜூலை 23

எதிர்வரும் திங்கட்கி ழமை முதல் மீண்டும் பாட சாலைகள் ஆரம்பிக்கப்பட வுள்ள நிலையில், மாலை 3.30 வரை கல்வி நடவடிக் கைகளை மேற்கொள்ளு மாறு கல்வி அமைச்சு

2

## யானை தாக்கி ஒருவர் சாவு!



திருமலை, ஜூலை 23

திருகோணமலை அல்லை கந்தளாய்பிரதான வீதியை அண் டிய பகுதியில் யானை தாக்கி இரண்டு பிள்ளைகளின் தந்தை யொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட

2



## தர்மபுரம் பகுதியில் வெடிபொருள் மீட்பு

கிளிநொச்சி, ஜூலை 23

கிளிநொச்சி, தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை பகுதியில் வெடிபொருள்கள் கண்டெடுக் கப்பட்டன.

அந்தப் பகுதியில் சந்தேகத்துக்கிட மான பொருள் காணப்படுவது

2

## கூட்டமைப்பு வேட்பாளர்கள் யாழ். ஆயரைச் சந்தித்தனர்



(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 23

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.தேர்தல்மாவட்டவேட்பாளர்கள் யாழ். ஆயர், நல்லை ஆதீன முதல் வர் ஆகியோரை இன்று வியாழக் கிழமைசந்தித்துக்கலந்துரையாடினர்.

கூட்டமைப்பின் வேட்பாளரான தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையிலான வேட் பாளர்கள் முதலில் யாழ். ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையை ஆயர் இல்லத்தில் சென்று சந்தித்தனர்.

2



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## தமிழர் பிரதேசங்களிலேயே தமிழர்களை ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெறுகின்ற என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி தேர்தல் தொகுதி வேட்பாளர் வைத்திய கலாநிதி ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா, கனகராயன்குளம் பகுதியிலுள்ள குறிசுட்டகுளத்தில் இன்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

வவுனியா பிரதேச செயலகம் அல்லது பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகள், 2009ஆம் ஆண்டு வரை எந்தவொரு மாற்று இனத்தவர்களும் வாழாத பிரதேசமாக இருந்தது. குடியேற்ற நடவடிக்கை ஊடாக வவுனியா வடக்கு எங்களது கைகளிலே இருந்து பறிபோகின்ற நிலை உருவாகியிருக்கின்றது.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வவுனியா வடக்குப் பிரதேச சபையில் இருக்கின்ற மொத்த உறுப்பினர்கள் 26 பேரில் 10 பேர் வேற்று இனத்தவர்களைச்சேர்ந்தவர்களாக இருக்கின்றனர்.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடையும் வரை நூறு வீதம் தமிழர் வாழுந்த இப்பிரதேசத்தில் இந்த மண்ணுக்கு சொந்தமில்லாதவர்கள் இப்போது இருக்கின்றனர். வேறு மாகாணங்களில் இருந்து பெரும்பான்மையின மக்களை இங்கு கொண்டுவந்து குடியேற்றியுள்ளார்கள்.

இதேபோல், முல்லைத்தீவிலும் ஐந்து பிரதேச செயலகங்கள் இன்று ஆறு பிரதேச செயலகங்களாக மாற்றப்பட்டுள்ளன. வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களின் ஒவ்வொரு பகுதிகளை இணைத்து யுத்தத்தின் போதும் யுத்தத்தின் பின்னரும் வேற்று பிரதேசத்தவர்களை குடியேற்றி அதனை அநுராதபுர நிர்வாக எல்லைக்குள் வைத்து அவர்களுக்குத் தேவையானவற்றை எல்லாம் செய்துவிட்டு அந்தப் பிரதேசத்தை வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவாக மாற்றி தற்போது முல்லைத்தீவுடன் இணைத்துள்ளனர்.

இவற்றையெல்லாம் செய்வதற்கு அவர்கள் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்ட ஆயுதம் மகாவலி எல் வலயம். இன்னும் எங்கள் பிரதேசத்திற்கு மகாவலி நீர் வரவில்லை. ஆனால் கொண்டுவருவதாகக் காட்டி மகாவலி அதிகார சபைக்குக் கீழ் இக்காணிகளை எடுத்து அந்த அதிகார சபைக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில் எங்கள் மக்களின் காணிகளை பறிமுதல்செய்து வேறு இனத்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கெல்லாம் ஒரேயொரு வழி, சட்ட ரீதியான போராட்டத்திற்குச் செல்வதேயாகும். அந்த வகையிலே அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

வவுனியா வடக்கு ஊஞ்சல்கட்டி பிரதேசம் முற்றுமுழுவதாக இன்று பறிபோகியிருக்கின்றது. அங்கு பூர்வீகமாக வாழ்ந்த மக்கள் பிரதிநிதிகளாக வரமுடியவில்லை. அப்பகுதியில் குடியேற்றப்பட்ட வேற்று இனத்தவர்கள் வந்ததன் காரணமாக அவர்களே மக்கள் பிரதிநிதிகளாக மாறியிருக்கிறார்கள்.

கள்ளிக்குளம் பிரதேசத்திலும் இவ்வாறான குடியேற்றங்கள் இடம்பெற்று வவுனியா பிரதேச சபைக்கும் முதன்முதலாக சிங்கள பிரதிநிதி ஒருவர் வந்துள்ளார். தற்போது வவுனியா வடக்கில் கிபுலு ஓயா திட்டத்தைப் பற்றி பேசுகின்றார்கள். இந்தத் திட்டடத்தின் ஊடாக குடியேற்றங்களை செய்யக்கூடிய வகையில் பாரிய திட்டங்களை முன்னெடுத்துள்ளார்கள்.

இதேபோல், செட்டிக்குளத்திலும் அப்பிரதேசத்தை கபளீகரம் செய்து இனப்பரம்பலை மாற்றியமைப்பதற்காக அங்கு இடம்பெறுகின்ற அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கம் தமக்கு சாதகமாக மாற்றியமைக்க நினைக்கின்றது.

வன்னி தோதல் தொகுதியில் இனப்பரம்பலையும் இன விகிதாசாரத்தினையும் மாற்றி இந்தப் பிரதேசத்தில் ஆண்டாண்டு காலமாக ஆண்டு வருகின்ற தமிழர்களை சிறுபான்மையினராக்கும் செயற்பாடுகளும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

ஆகவே, இந்த தேர்தலை நாங்கள் மிகவும் முக்கியமான தேர்தலாகப் பார்க்க வேண்டும். இன்று எங்களுக்குத் தெரியாத பல கட்சிகள் களமிறங்கியுள்ளன. ஏன் அவர்கள் வந்தார்கள்? அவர்களுக்கு இந்த மண்ணோடு எந்த சம்பந்தமும் இல்லை. மண்ணுக்காக உழைக்கவுமில்லை. அவ்வாறு இருக்கும்போது அவர்களுக்குள்ள அக்கறை என்ன?

அவர்களுக்கு நிச்சயமாக நாடாளுமன்றம் போகமாட்டோம் என்பது தெரியும். 100 வாக்குகள் பெற முடியாதவர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். ஆனாலும், அவர்கள் பல கோடி ரூபாக்களை இங்கு செலவழிப்பது ஏன்? கொழும்பில் இருந்து வந்து தேர்தலில் போட்டியிடுபவர்கள் கோடிக்கணக்கான நிதியை செலவழித்து கூட்டங்களைப் போடுகின்றனர்.

அவ்வாறு கூட்டத்திற்கு வந்தவர்களுக்கு 3000 ரூபா வரை பணமும் வழங்குகின்றனர். இவர்கள் கூட்டமைப்பை இல்லாமல் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் செயற்படுகின்றனர்.

ஆனால், கூட்டமைப்பு பாரிய விருட்சம். தமிழ் மக்களின் ஏக பிரதிநிதித்துவம். ஆகவே கூட்டமைப்பை ஒழிப்பதனூடாக தமிழ் மக்களை ஒழித்து விடலாம் என எண்ணுகின்றனர்.

தமிழர்கள் தங்களுடைய நிலங்களை இழந்துகொண்டு போகின்றனர். பூர்வீகநிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. இன அழிப்பு நடைபெறுகின்றது. இங்கு பலபோர்க்குற்றங்கள் புரியப்பட்டுள்ளன. அவற்றைப்பற்றி பேச வேண்டிய தமிழ் கட்சிகளின் தலைவர்கள் சம்பந்தரின் வீட்டையும் காரையும் செருப்பையும் பற்றிப் பேசுகின்றனர் -என்றார்.

## தர்மபுரம் பகுதியில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொடர்பாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைவாக நேற்று அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

அங்குள்ள பற்றையில் காணப்பட்ட பொதியைச் சோதனையிடுவதற்காக கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் அனுமதி பெறப்பட்டது. பின்னர் இன்று காலை விசேட அதிரடிப்படையினர் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன்போது, பை ஒன்றிலிருந்து 11 வெடி பொருள்கள் இவ்வாறு கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பான விசாரணையை தர்மபுரம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## யானை தாக்கி .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பகுதியில் இன்று அதிகாலை 4.00 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் மஹியங்கனை பகுதியைச்சேர்ந்த கத்தரசிங்க ஆராச்சிலாகே அந்துன் டத்துர கத்தப்பான்கொட (வயது- 52) என்பவரே உயிரிழந்துள்ளார்.

## கூட்டமைப்பு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்பின்னர் நல்லை ஆதீனத்துக்குச் சென்ற வேட்பாளர்கள் அங்கு நல்லை ஆதீன முதல்வரையும் சந்தித்துப் பேசினர்.

இச் சந்திப்பில் வேட்பாளர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறிதரன், ஈ.சரவணபவன், திருமதி சசிகலா ரவிராஜ், இமானுவேல் ஆர்னல்ட், தபேந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

இதன்போது சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பிலும் தேர்கல்கள நிலைமைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதாகக் கூறப்பட்டது.

## பிற்பகல் 3.30 மணி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அறிவித்துள்ளது.

அந்த வகுப்புகளுக்கான ஆசிரியர்களைத் தவிர வேறு ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு வரவேண்டிய அவசியமில்லைஎன அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த விதிகளுக்கான புதிய சுற்றறிக்கையை இன்று அல்லது நாளை வெளியிடவுள்ளதாக அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் திங்கட்கிழமை 11, 12 மற்றும் 13ஆம் வகுப்புகளுக்கு மாத்திரமே பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனக் குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி அனைத்து வகுப்புகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

## கிளிநொச்சி விபத்தில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த இ.போ.ச. பஸ் மோதியதில் அவர் படுகாயம் அடைந்தார்.

இதையடுத்து, உடனடியாகவே கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவருடைய உடைமைகளில் ஆள் அடையாள அட்டைகள் எதுவும் இல்லாத நிலையில் முதியவரை அடையாளம்காணும்நடவடிக்கையில்கிளிநொச்சி பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

## கறுப்பு ஜூலை நினைவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
1983ஆம் ஆண்டு நாடு முழுவதும் இடம்பெற்ற கலவரத்தில் உயிரிழந்த தமிழ் உறவுகளை நினைந்து யாழ். பல்கலைவளாகத்தினுள் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தலில் மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர் சங்கத்தினர் கலந்துகொண்டு மலர்தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

இன்று யாழ். பல்கலைக்கழக வளாகத்தை சூழ வழமைக்கு மாறான வகையில் இராணுவப் பிரசன்னம் அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம - 11)

## குடாநாட்டில் இதுவரை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே தெரிவத்தாட்சி அலுவலர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

யாழ். தேர்தல் மாவட்டத்தில் இதுவரை 105 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு பிறகு யாழ். மாவட்ட செயலகத்தில் இயங்குகின்ற மத்திய முறைப்பாட்டு நிலையத்துக்கு மேலதிகமாக பன்முகப்படுத்தப்பட்ட வகையில் மேலும் மூன்று முறைப்பாட்டு நிலையங்களைச் சண்டிலிப்பாய், சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலகங்களில் அமைக்கப்படவுள்ளன.

இந்த நிலையங்களில் வெளிமாவட்டத்தில் இருந்து விசேடமாக வரவழைக்கப்படுபவர்களுடன், யாழ் மாவட்ட அலுவலர்களும் இணைந்து கண்காணிப்பு மற்றும் முறைப்பாடுகளை பெறுவதற்கு தயாராக இருப்பார்கள் - என்றார்.

## மூவின மக்களுக்கும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பில் இன்று நடைபெற்ற வர்த்தகர்களுடனான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது: -

நான் ஜனாதிபதி பதவி வகித்த காலத்தில் நாட்டில் வர்த்தகத்துறையில் காணப்பட்ட நெருக்கடிகளுக்கு பேச்சுகளின் ஊடாகத் தீர்வு வழங்கப்பட்டது. தேசிய பொருளாதாரத்தில் வர்த்தகத்துறைபாரியபங்களிப்புசெலுத்துகின்றது. மூவின மக்களும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். அவர்களின் வர்த்தக நடவடிக்கைளும் அரசால் பாதுகாக்கப்பட்டன.

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் பொருளாதாரம் சடுதியாக வீழ்ச்சியடைந்தது. இதனால் வர்த்தகர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டார்கள். முறையற்ற பொருளாதாரக் கொள்கையால் ரூபாவின் வீழ்ச்சி தொடர்ந்து உயர் மட்டத்தில் காணப்பட்டது.

நான் 2005ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போது பொருளாதார நெருக்கடி மற்றும் இதர சவால்களை எதிர்கொண்டேன். அனைத்துச் சவால்களுக்கு மத்தியிலும் ரூபாவின் வீழ்ச்சி கட்டுப்பாட்டுக்குள் இருந்தது.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இடைக்கால அரசு ஆட்சிக்கு வரும் போது ரூபாவின் வீழச்சி 200 ஆகக் காணப்பட்டது. பொருளாதார கொள்கைத் திருத்தம் செய்யப்பட்டதன் பின்னர் ரூபாவின் வீழ்ச்சி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு 185 ரூபாவாக ஒரு டொலரின் பெறுமதி கட்டுப்படுத்தப்பட்டது.

எனது வர்த்தகர்கள் இனம், மதம் வேறுபாடின்றி சுதந்திரமான முறையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுப்படுவதற்கான சூழலை புதிய அரசில் உறுதிப்படுத்துவேன் - என்றார்.

**விளம்பரத் தொடர்புகளுக்கு -**

**மின்னஞ்சல் -**
kalaikkathiradvt@gmail.com

**தொலைபேசி இலக்கம் -**
**076 443 8622**

காலைக்கதிர் Kalaikkathir

**பத்திரிகைத்துறை வெற்றிடங்கள்**

- **உதவி ஆசிரியர்**
- **ஒப்பு நோக்கர்கள்**

**முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்**

தொடர்புகளுக்கு -
**காலைக்கதிர்**
**இல - 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்**
**076 443 8622**

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மனோவும் தமிழர்களும்

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் என்ற தொழிற்சங்கத்தின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான மனோ கணேசன் கொழும்பு மாவட்டத்தில் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி ஊடாக இம்முறை தேர்தலில் களமிறங்கியிருக்கின்றார்.

அவரைநாடாளுமன்றுக்குஅனுப்புவதுகொழும்புத்தமிழர்களின் கடமை என்று சுட்டிக் காட்டியிருக்கின்றார் யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தற்போதைய கூட்டமைப்பு வேட்பாளருமான சிவஞானம் சிறீதரன்.

இது தொடர்பில் சிறீதரன் பகிரங்க அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றார்.

அப்படி அவர் பகிரங்க அறிக்கை விடுத்தமைக்கு ஆயிரம் அர்த்தங்கள் – உள் நோக்கங்கள் – கற்பிக்கப்படலாம். அவற்றில் சில சமயங்களில் உண்மையும் இருக்கக் கூடும்.

மனோ கணேசனுக்கு ஆதரவாகத் தமிழ் மக்களை வாக்களிக்கச் சொல்லும் வழிப்படுத்தலை – பரிந்துரையை – தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது சிறீதரனின் தமிழரசுக் கட்சியோ கூட இன்னும் பகிரங்கமாக வெளிப்படுத்தவில்லை.

சிறீதரனுடன் அணி சேர்ந்து தேர்தல் வியூகம் அமைத்திருக்கும் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கூட அப்படி ஓர் அறிவிப்பை விடுக்கவில்லை.

இத்தரப்புகள் எல்லாம் இனிமேல்தன்னும் அப்படி மனோ கணேசனுக்கு ஆதரவாகச் செயற்படுங்கள் என்று தலைநகர்த் தமிழர்களுக்கு வழிப்படுத்தல் அறிவிப்பை விடுக்குமா என்பதும் தெரியவில்லை.

குறைந்தபட்சம் கொழும்பில் இயங்கும் தமிழரசுக் கட்சியின் தலைநகர்க்கிளையாவது அப்படி ஒரு பரிந்துரையை முன்வைக்குமா என்பதும் தெரிய வரவில்லை.

ஆனால், சிறீதரன் முந்திக் கொண்டு ஒரு பகிரங்க அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார். அதன் உள்நோக்கம் எதுவாகவும் இருக்கலாம்.

இந்தத் தேர்தலில் வழமைபோல சிறீதரன் பிரதானமாக இலக்கு வைத்திருக்கும் பிரதேசம் அவரது தாய் மண்ணான கிளிநொச்சி மாவட்டம்தான். கடந்த தடவைத் தேர்தலிலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் விருப்பு வாக்குகளில் சிறீதரன் முன்னிலை பெறுவதற்கு வாய்ப்பாக அமைந்தது கிளிநொச்சியில் அவருக்கு இருந்த – இருக்கின்ற – ஆழமான செல்வாக்குத்தான்.

அந்தக் கிளிநொச்சி மாவட்டத்தில் மலையகத்தை மூலமாகக் கொண்ட மக்களின் கணிசமான வாக்குகள் உள்ளன. மலையக மக்களின் தலைவருமான மனோ கணேசன் மூலம் அந்தக் கிளிநொச்சி வாக்குகளை தமக்கு ஆதரவாக உறுதிப்படுத்தவே சிறீதரன் இந்த அரசியல் நகர்வை எடுத்துள்ளார் என சில வட்டாரங்கள் செய்தி வெளியிடுகின்றன.

அதுவே காரணமாகவும், உணமையாகவும் கூட இருக்கலாம். அப்படியே இருந்து விட்டும் போகட்டும்.

ஆனால், மனோ கணேசன் இந்த முறை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவது தமிழருக்கு ஏன் கட்டாயமானதும் என்பது தொடர்பில் சிறீதரன் காட்டும் காரணங்கள் மறுக்கப்பட்ட முடியாதவை. தமிழர்களுக்கான அத்தியாவசிய தேவையை சிறீதரன் எடுத்துரைத்திருக்கின்றார்.

2006 – 2009 இற்கும் இடைப்பட்ட யுத்த காலத்தில் முழு நாட்டிலும் – குறிப்பாகத் தலைநகரிலும் – தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்களுக்கு எதிராக இரட்டைக் குழல் துப்பாக்கி போல தலைநகரில் குரல் எழுப்பிப் போராடிய இரண்டு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமரர். தி.மகேஸ்வரன் மற்றும் மனோ கணேசன்.

தமிழர்களைத் தலைநகர் கொழும்பிலிருந்து வல்வந்தமாகப் பிடித்து பஸ்களில் ஏற்றி அனுப்ப முயன்ற சம்பவத்திலிருந்து, தமிழருக்கு எதிரான ஒவ்வொரு கொலை வெறித் தாக்குதல் தொடர்பிலும் தங்கள் உயிரைப் பணயம் வைத்து இந்த இருவரும் ஆற்றிய பணி மறக்கற்பாலதன்று.

இந்த யுத்த காலத்தை ஒட்டிய நிலைமை இந்தத் தேர்தலுக்குப் பின்னர், தமிழருக்கு எதிராக – தமிழ்ப் பேசும் மக்களுக்கு எதிராக – தலைநகரிலும் பிற இடங்களிலும் கட்டவிழும் வாய்ப்பு அதிகம் உள்ளது.

சிறீதரன் குறிப்பிடுகின்றமை போல ஓர் இராணுவ ஆட்சி உருவாகக் கூடிய ஆபத்துக்கான ஏது நிலைகளும் தாராளமாகவே உள்ளன.

1983 ஜூலைக் கலவரக் காலம் போன்ற சூழலே இப்போதும் உருவாகி வருவதாக வடக்கு முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன் சுட்டிக் காட்டியிருக்கின்றமையும் புறக்கணிக்கத் தக்கதல்ல.

இத்தகைய பின்புலத்தில் மும்மொழி ஆற்றலும், ஆளுமைப் பண்பும், அனைத்துத் தமிழ் பேசும் மக்களின் நிலைமைகளை அவர்களின் மனங்களின் ஊடாக அறிந்து கொள்ளும் நுட்பமும் கொண்ட மனோ கணேசன் நாடாளுமன்றில் இருப்பது தமிழ்ப் பேசும் மக்களைப் பொறுத்தவரை மிக மிகக் கட்டாயமாகும்.

ஆனால் அதற்கான வாய்ப்பு மிக மிக அருகியதாகவே உள்ளது. அதனால்தான் தமிழருக்கு இந்த வற்புறுத்தல் கோரிக்கையை சிறீதரன் முன்வைத்திருக்கலாம் என்று கருதலாம்.

நாடாளுமன்றுக்குத் தேர்வாவதில் மனோ கணேசனுக்கு உள்ள நெருக்கடிகள், பின்னடைவுகளை அடுத்து வரும் இப் பத்தியில் பார்ப்போம்.

# சர்வதேச வர்த்தக மையமாக மஹரகம அபிவிருத்தியடையும்

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உறுதி

கொழும்பு, ஜூலை 23

மஹரகம நகரத்தைச் சர்வதேச வர்த்தக மையமாக அபிவிருத்தி செய்யவுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



தற்போது மஹரகம நகரம் ஆடைகள் தொடர்பான தொழிற்சாலைக்காக பிரபலமடைந்துள்ளது எனவும், இதனால் பிரதேசத்தின் வசதிகளை அதிகரித்து தேசிய, சர்வதேச மக்களுக்கு அவசியமான ஆடைகள் உட்பட ஏனைய பொருள்களைக் கொள்வனவு செய்யும் மத்திய நிலையமாக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனூடாக மக்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகப் பிரதமர் கூறியுள்ளார்.

கொழும்பு தலவத்துகொட பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், எதிர்வரும் 5 வருடங்களில் நாடு முழுவதும் அபிவிருத்தித் திட்டங்களுடனான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஆயத்தமாகியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மக்களின் வீட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்து, தங்களுக்கான வீடுகளை உரிமையாக்கிக் கொள்வதற்காகத் தனியார் பிரிவுடன் இணைந்து செயற்படவுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

இதேவேளை, 69 இலட்சம் மக்கள் அனுமதி வழங்கிய சுபீட்சத்தின் நோக்கு வேலைத் திட்டத்தில் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு முன்வைக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.





# காட்டு யானை அட்டகாசம் பூவரசந்தீவில் வீடு சேதம்

## அன்றிரவு வீட்டில் இல்லாததால் உயிர் தப்பினர் குடும்பத்தவர்கள்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட, பூவரசந்தீவில் வசிக்கும் ஒருவரின் வீட்டை இன்று அதிகாலை 3.00மணியளவில் யானை ஒன்று உடைத்துச் சேதமாக்கியுள்ளது.

சம்பவ நேரத்தில் வீட்டில் இருந்தோர் அவர்களின் உறவினர்களின் வீட்டுக்கு சென்றிருந்தமையால், அவர்கள் அதிஷ்டவசமாக எதுவித ஆபத்துமின்றி தப்பியுள்ளனர் எனத் தெரிவித்தனர்.

இவ்வாறு யானைகள் அடிக்கடி ஊருக்குள் உட்பிரவேசித்து சேதம் விளைவிப்பதனால், மக்கள் பெரும் அசௌகரியத்திற்கு உள்ளாகுகின்றனர் என கிராமவாசிகள் தெரிவித்தனர்.

இது சம்பந்தமாக உரிய அரச அதிகாரிகளிடம் தெரிவித்தும் இதுவரை எதுவித தீர்வும் பெற்றுத் தரப்படவில்லை எனப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.

# ஜூன் 16 தொடக்கம் 90,862 பேர் சிக்கினர்

கடந்த ஜூன் மாதம் 16ஆம் திகதி முதல் இன்று (23) வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின்போது, பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 90 ஆயிரத்து 862 பேர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள், ஆயுதங்கள், வெடிபொருள், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்தச் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட 17 ஆயிரத்து 913 பேரும், ஏனைய குற்றங்களை இழைத்த குற்றச்சாட்டுகளில் 33 ஆயிரத்து 269 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் 11 ஆயிரத்து 480 பேரும், கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 8 ஆயிரத்து 229 பேரும், ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 662 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆயுதங்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 184 பேரும், வெடிபொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 18 பேரும், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 19 ஆயிரத்து 107 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்புகளின்போது ரி 56 வகை துப்பாக்கிகள் 13 – ரி 81 வகை துப்பாக்கி 01, 12 துளை கொண்ட துப்பாக்கிகள் – 51, கைத்துப்பாக்கிகள் – 05, நாட்டுத் துப்பாக்கிகள் – 29, ரீபீட்டர் வகை துப்பாக்கிகள் – 92, ரிவோல்வர் வகை துப்பாக்கிகள் – 02 மற்றும் ஏனைய வகையான துப்பாக்கிகள் – 02, தோட்டாக்கள் – 1,749, வாள்கள் – 11, கத்திகள் – 07 ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன

# புதிதாக 45 ஆயிரத்து 720 பேருக்கு இந்தியாவில் ஒரே நாளில் தொற்று

இந்தியாவில் இதுவரை இல்லா வகையில் ஒரே நாளில் புதிதாக 45 ஆயிரத்து 720 பேருக்கு கொரோனா பாதிப்பு உள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

இதனால் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 12 லட்சத்து 38 ஆயிரத்து 635 ஆக உயர்ந்துள்ளது.

கொரோனாவால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 29 ஆயிரத்து 861 ஆக உயர்ந்துள்ளது. கொரோனாவால் பாதிக்கப்பட்டோரில் 7 லட்சத்து 82 ஆயிரத்து 606 பேர் குணமடைந்துள்ளனர்.

4 லட்சத்து 26 ஆயிரத்து 167 பேர் தற்போதைய நோயாளிகளாக மருத்துவமனைகளிலும், முகாம்களிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என மத்திய நலவாழ்வு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஜூலை 22 வரை மொத்தம் ஒரு கோடியே 50 லட்சத்து 75ஆயிரத்து 369 மாதிரிகள் கொரோனா சோதனை செய்யப்பட்டுள்ளன எனவும், ஜூலை 22 ஆம் நாள் மட்டும் 3 லட்சத்து 50 ஆயிரத்து 823 மாதிரிகள் சோதனை செய்யப்பட்டுள்ளன எனவும் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்ஸில் தெரிவித்துள்ளது.



# வீதியோரத்தில் டீ விற்பவரின் பெயரில் ரூ.50 கோடி கடன்!

## வங்கியை எமாற்றியுள்ள பலே கில்லாடி





ஹரியானாவில் டீ விற்று பிழைப்பை நடத்துபவருக்கு, 50 கோடி ரூபாயை செலுத்தச் சொல்லி வங்கி நிர்வாகம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. இதனால், கடும் அதிர்ச்சி அடைந்துள்ளார் டீக்கடைக்காரர்.

கொரோனா வைரஸ் பரவலால் அமல்படுத்தப் பட்டுள்ள பொது முடக்கத்தால் தொழில்துறைகள் பலவும் கடுமையாகப் பாதித்துள்ளன. சிறு தொழிலிலிருந்து கார்பரேட் நிறுவனங்கள் வரை நிதிப் பற்றாக்குறையில் சிக்கித் தவிக்கின்றன. இந்த நிலையில் கொரோனா ஊரடங்கால் தொழில் நசிந்த டீக் கடைக்காரர் ஒருவர், வங்கிக்கு கடன் கேட்டுப் போயுள்ளார். அப்போது தான் அவர் வாங்காத கடனுக்கு நோட்டீஸ் அளித்து அதிர்ச்சி அளித்துள்ளது, வங்கி நிர்வாகம்.

அந்த டீக் கடைக்காரரின் பெயர் ராஜ்குமார். ஹரியானா மாநிலம் குருதேராவில் சாலையோரம் டீ விற்று பிழைப்பை நடத்தி வருகிறார். கொரோனா நோய்த் தொற்று காரணமாக ஊரடங்கு அமல்படுத்தப் பட்டுள்ளதால், இவரால் கடை திறக்க முடியவில்லை. குடும்பத்தை நடத்தவே திணறினார். இவருடன் பணி செய்தவர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத சூழலில் ஊருக்கு அனுப்பிவைத்துவிட்டார் ராஜ்குமார். இந்த நிலையில் நிலைமையை சமாளிக்க குருஷேத்திராவில் உள்ள வங்கி ஒன்றுக்கு கடன் கேட்டுச் சென்றுள்ளார்.

விண்ணப்பத்தை ஆய்வு செய்த வங்கி நிர்வாகம், நீங்கள் ஏற்கெனவே 50 கோடி ரூபாயைக் கடனாக வாங்கியிருக்கிறீர்கள். அதனால் இப்போது உங்களுக்கு கடன் கொடுக்க முடியாது. அந்தக் கடனை எப்போது திரும்ப அடைப்பீர்கள்? என்று கேட்டுள்ளது. இந்தக் கடனைக் காரணம் காட்டி ராஜ்குமாரின் கடன் விண்ணப்பத்தையும் வங்கி நிர்வாகம் நிராகரித்து, நோட்டீஸ் வழங்கியுள்ளது.

இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த ராஜ்குமார், சாலையில் டீ விற்று பிழைப்பை நடத்தும் எனக்கு வங்கி நிர்வாகம் எப்படி ஐம்பது கோடி ரூபா கடனை வழங்கி இருக்க முடியும்? இது எப்படி சாத்தியம்? என்று குழம்பி போயுள்ளார்.

டீக்கடைக்காரர் ராஜ்குமார் பெயரில் யாரோ ஒருவர் வங்கியில் மோசடி செய்திருப்பதை உறுதி செய்துள்ளனர் வங்கி அதிகாரிகள். இதுகுறித்து தற்போது விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கொரோனா நோயாளி இறந்தமையால் ஆத்திரத்தில் அம்புலன்ஸை எரித்த குழு

## கர்நாடகம் பெலகாவியில் சம்பவம்



கர்நாடக மாநிலம் பெலகாவியில் அரசு மருத்துவமனையில் கொரோனா நோயாளி உயிரிழந்த நிலையில், ஆத்திரமடைந்த அவரது உறவினர்கள் அம்புலன்ஸைத் தீ வைத்து எரித்து கலவரத்தில் ஈடுபட்டனர்.

பெலகாவியில் உள்ள அரசு பிம்ஸ் மருத்துவமனையில் (BIMS Hospital) கடந்த 19ஆம் திகதி கொரோனாத் தொற்றுடன் நோயாளி ஒருவர் அனுமதிக்கப்பட்டார்.

சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழுந்த நிலையில் மருத்துவமனையை முற்றுகையிட்ட உறவினர்கள், கட்டடத்தின் மீது கற்களை வீசியமையுடன் மருத்துவமனை ஊழியர்கள் மீதும் தாக்குதல் நடத்த முயற்சித்தனர்.

பின்னர் ஆத்திரம் அடங்காமல் சாலைக்கு வந்தவர்கள் அத்தானி பகுதியில் இருந்து வந்த அம்புலன்ஸ் ஒன்றுக்குத் தீ வைத்தனர். தீயணைப்புத் துறையினர் வருவதற்குள் அம்புலன்ஸ் முற்றிலும் எரிந்து நாசமானது. தகவலறிந்து வந்து வன்முறை கூட்டத்தை கலைத்த பொலிஸார், அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்துள்ளனர் எனத் தெரிவித்தனர்.

மேலும் சம்பவம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. இந்தச்சம்பவத்தைத் தொடர்ந்து மருத்துவமனைக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

# உலக பணக்காரர்கள் பட்டியலில் 5 ஆம் இடத்தில் முகேஷ் அம்பானி

ரிலையன்ஸ் குழுமத்தின் தலைவர் முகேஷ் அம்பானி உலகப் பணக்காரர்கள் பட்டியலில் ஐந்தாம் இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

போர்ப்ஸ் நாளிதழ் வெளியிட்டுள்ள நிகழ்நேர பட்டியலில், ஜியோ நிறுவனத்தில் கிடைக்கபெற்ற தொடர்ச்சியான முதலீட்டின் மூலம், அம்பானியின் சொத்தின் மதிப்பு சுமார் 5 லட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்ந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டு உள்ளது.

இதன் மூலம், அமெரிக்க முதலீட்டாளர் வாரன் பஃபெட்டை பின்னுக்கு தள்ளி பெரும் பணக்காரர்கள் பட்டியலில் முகேஷ் அம்பானி ஐந்தாம் இடத்தை அடைந்துள்ளார். இதனிடையே, சுமார் 13 லட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாய் சொத்து மதிப்புடன், அமேசான் நிறுவன தலைவர் ஜெஃப் பெசோஸ் உலக பணக்காரர்கள் பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.



# அமெரிக்காவில் 30,000 ஆண்டுகள் முன் மனிதன் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள்!

## பழமையான கல் கலைப்பொருள்கள் கண்டுபிடிப்பு



அமெரிக்காவில் 30 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதர்கள் வாழ்ந்தமைக்கான ஆதார மாக கல் கலைப்பொருள்களை ஆராய்ச்சியாளர் கள் கண்டறிந்துள்ளனர். அமெரிக்காவுக்கு கிழக்கு ஆசியாவில் இருந்து முதன்முதலில் ம னிதன் சென்றான் என கூறப் படும் நிலையில், எப்போது சென்றார்கள் என்பது இன்றளவும் விவாதப் பொருளாகவே இருந்து வருகிறது.

இந்த நிலையில், 30 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வட அமெரிக்காவில் மனிதர்கள் வாழ்ந் ததற்கான ஆதாரங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

அஸ்டில்லெரோ மலைகளில் கடல் மட்டத்திலி ருந்து 2,740 மீற்றர் உயரத்தில் உள்ள சிக்விஹு யிட் குகையில், 2012 ஆம் ஆண்டு முதல் மெக் ஸிகோ பல்கலைக்கழகக் குழு ஆராய்ச்சி செய்து வரும் நிலையில், ஏறக்குறைய 2 ஆயிரம் கல் கருவிகள் கண்டறியப்பட்டுள்ளன.

அவற்றில் சில 25 ஆயிரம் முதல் 32 ஆயிரம் ஆண்டுகள் பழமையானவை என்பது கார்பன் பரிசோதனையில் தெரியவந்துள்ளது. மேலும் பண்டைய டி.என்.ஏவைத் தேடும் பணியில் ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

# ஹூஸ்டன் சீனத் துணைத் தூதரகத்தை 72 மணி நேரத்தில் மூட அமெ. உத்தரவு



கொரோனா பரவல் காரணமாக அமெரிக் காவுக்கும் சீனாவுக்கும் மோதல் முற்றியுள்ளது. கொரோனா உலகம் முழுக்க பரவ சீனாவே கார ணமென்று அமெரிக்க அதிபர் டிரம்ப் குற்றம் சாட்டி வந்தார்.

இந்த நிலையில், டெக்ஸாஸ் மாகாணத் தலைநகரான ஹூஸ்டன் நகரில் செயல்பட்டு வந்த சீன துணை தூதரகத்தை 72 மணி நேரத் துக்குள் மூட வேண்டுமென்று டிரம்ப் அரசு உத்தர விட்டுள்ளது.

டெக்ஸாஸ் மாகாணத்திலுள்ள 'ஏஅண்ட் எம்' மருத்து ஆராய்ச்சி மையம் , டெக்ஸாஸ் பல் கலைக்கழகம் , ஹூஸ்டனில் உள்ள எம்.டி ஆண்டர்சன் புற்றுநோய் ஆராய்ச்சி மையங்களில் தரவுகளை ஹூஸ்டனிலுள்ள சீன துணை தூதர கம் திருடும் நடவடிக்கையில் ஈடுபட்டதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகச் சொல் லப்படுகிறது.

குடியரசுக் கட்சியின் புளோரிடா மாகணத்தை சேர்ந்த செனட்டர் மார்கோ ரூபியோ தன் ட்விட்டர் பதிவில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் ஒற்றர்களின் வலையமைப்பாக ஹூஸ்டன் தூதரகம் செயல் பட்டுள்ளது. இது ராஜ்ய ரீதியிலான உறவுகளை மேற்கொள்ளும் மையம் அல்ல" என்று தெரி வித்துள்ளார்.

சீன துணை தூதர் கெய் வீ கூறுகையில், "அமெரிக்க அரசின் இந்த முடிவு இரு நாட்டு உறவையும் கடுமையாக பாதித்து விடும். ஒரு குற்றச்சாட்டை சொல்வதற்கு முன், அதற்குரிய ஆதாரங்களைக் காட்ட வேண்டும்" என்று அமெ ரிக்காவின் நடவடிக்கையைக் கண்டித்துள்ளார்.

சீன வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் வாங் பின், "துணை தூதர கத்தை குறுகிய காலத்துக்குள் மூட உத்தரவிட்டது சீனாவுக்கு எதிராக அமெ ரிக்கா கொண்டிருக்கும் கடுமையான நிலைப்பாட்டைக் காட்டுகிறது. இந்த முடிவை திரும்பெறாவிட்டால், உறுதி யான எதிர் விளைவுகளை அந்த நாடு எதிர்கொள்ள நேரிடும் " என எச்சரித் துள்ளார்.

இதற்கிடையே. சீன தூதரகத்தை மூட உத்தரவிட்ட சில மணிநேரத்துக்குள் கட்டடத்தின் உள்ளே காகிதங்கள் எரிக் கப்பட்டன எனவும் அதனால ஏற்பட்ட புகை மூட்டம் காரணமாக தீயணைப்பு வண்டிகள் அந்த கட்டடத்தை நோக்கிச் சென்றன எனவும் ஆனால், தீயணைப்பு வீரர்கள் கட்டடத்தினுள்ளே அனுமதிக்கப்பட வில்லை என்று ஹூஸ்டன் குரோனிக்கல் பத்தி ரிகை செய்தி வெளியிட்டுள்ளது.



இதனால், சீன தூதரகத்துக்குள் ஆவணங்கள் எரிக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படு கிறது. இது குறித்து அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கூறுகையில், "தூதரகத்தினுள்ளே ஆவ ணங்கள் எரிக்கப்பட்டிருக்க வாய்ப்பு உள்ளது. அமெரிக்காவில் செயல்பட்டு வரும் மேலும் சில சீன மையங்களையும் மூட யோசித்து வருகி றோம்" என்றார்.

அமெரிக்க அரசின் உத்தரவின்படி, நாளை மாலை 4 மணிக்குள் தூதரகம் மூடப்பட்டு விட வேண்டும். இதற்கிடையே, வொஷிங்டனில் உள்ள சீன தூதரகத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் வந்ததாக சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவுக்குப் பதிலடி கொடுக்கும் வகை யில் வுஹான், ஷாங்காய், ஹாங்காங், குவாங்சு நகரங்களில் உள்ள அமெரிக்க துணை தூதர கங்களை மூட சீனா உத்தரவிடலாம் என்று அர சியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

# பிரேசில் அதிபருக்குக் கொரோனா 3 ஆவது பரிசோதனையிலும் உறுதி

பிரேசில் அதிபர் ஜெயிர் போல்சனேரோவுக்கு 3ஆவது சோதனையின் போதும் கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனா ஒரு சிறிய காய்ச்சல், அதற்காக முகக்கவசம், ஊரடங்கு தேவையில்லை என்று கூறி வந்த பிரேசில் அதிபர் ஜெய்ர் போல்சோனரோவுக்கு கடந்த 7 ஆம் திகதி கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.



இதையடுத்து வீட்டிலேயே தனிமைப்படுத்தி கொண்ட அவருக்கு கடந்த 15 ஆம் திகதி பரிசோதனை செய்ததி லும் தொற்று உறுதி செய்யப் பட்டது.

இந்நிலையில், அதிபர் போல்சனேரோ 3 ஆவது முறையாக நேற்று முன்தினம் பரிசோதனை செய்துகொண்டதில் மீண்டும் கொரோனாப் பாதிப்பு உறுதியாகியுள்ளது.

இது தொடர்பாக அதிபர் மாளிகை வெளியிட்ட செய்திக் குறிப் பில், போல்சனேரோ நல்ல உடல்நிலையுடன் இருக்கிறார் என வும், அவரை மருத்துவக்குழுவினர் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளது.

மேலும் அதிபர், தனது இரண்டு வார தனிமைப்படுத்தலை நீடிக்கிறார் எனவும், பயணத் திட்டங்களை நிறுத்தி வைத்துள்ளார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அடுத்த ஆண்டு வரையில் கொரோனா தடுப்பூசியை எதிர்பார்க்க வேண்டாம்

## இப்படித் தெரிவிக்கிறது உலக சுகாதார அமைப்பு

அடுத்த ஆண்டின் தொடக்கம் வரையில் கொரோனா வைர ஸுக்கான தடுப்பூசியை எதிர் பார்க்க வேண்டாம் என உலக சுகாதார அமைப்பு சார்பில் தெரி விக்கப்பட்டு உள்ளது.

இது தொடர்பாக பேசிய அந்த அமைப்பின் அவசர காலத் திட்டத்தின் தலைவர் மைக்ரி யான், நோய்த்தொற்றிற்கு எதிரான தடுப்பூசியை தயாரிப் பதில் ஆராய்ச்சியாளர்கள் நல்ல முன்னேற்றம் அடைந்து இருக் கின்றனர் எனவும், ஆனால் அவற்றின் பயன்பாட்டை அடுத்த ஆண்டில் மட்டுமே எதிர்பார்க்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

பொருளாதாரத்தைச் சார்ந்து இல்லாமல், தேவையைப் பொறுத்து தடுப்பூசி விநியோ கத்தை உறுதி செய்ய செயல் பட்டு வருவதாகவும், தடுப்பூசி கிடைக்கும் வரையில் நோய்த் தொற்றுப் பரவலைக் கட்டுப்ப டுத்துவது அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கமரா பொருத்தப்பட்ட துப்பாக்கிகளை அமெரிக்கப் பொலிஸ் பயன்படுத்துகிறது

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில், முதல் முறையாகத் தானியங்கி கமராக்கள் பொருத்தப்பட்ட கைத்துப்பாக்கிகளை பொலிஸார் பயன் படுத்தத் தொடங்கியுள்ளனர்.

கருப்பினத்தவரான George Floyd-இன் மரணத்துக்கு நீதி கேட்டு நடந்த போராட்டங்களின் போது பொலிஸார் நடத்திய பல்வேறு துப்பாக்கி சூட்டுச் சம்பவங்கள் தொடர்பாக பொதுமக்கள் சந்தேகங்களை எழுப்பினர்.

கடந்த 2016 ஆம் ஆண்டு முதல், பாதிக்கும் மேற்பட்ட பொலிஸார், கமரா பொருத்தப்பட்ட உடைகளை அணிந்து வரும் நிலையில், தற்போது, உறை யில் இருந்து துப்பாக்கியை எடுத்த தும், காணொலிக் காட்சிகளைப் பதிவு செய்யத் தொடங்கும் தானியங்கி கமரா பொருத்தப்பட்ட துப்பாக்கிகளைப் பயன் படுத்த தொடங்கியுள்ளனர். இதனால், துப்பாக்கி சூட்டின் போது நடந்த சம்ப வங்களை சரியான ஆதா ரத்துடன் நீதிமன்றத்தில் சமர்பிக்க முடியும் என அவர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

# 4 வகைகளில் ரஷ்யா தயாரித்த கொரோனா நோய்த் தடுப்பூசிகள்

## பாதுகாப்பானவை என்கிறார் அந்நாட்டுப் பிரதமர் மிக்கைல்

ரஷ்யாவில் தயாரிக்கப்பட்டு வரும் 4 கொரோனா தடுப்பூசிகள் பாதுகாப்பானவை என்பது பரிசோதனையில் நிரூபணமாகியுள் ளது என அந்நாட்டு பிரதமர் மிக்கைல் மிசுஸ் டின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், நாட்டில் மொத்தம் 17 அறிவியல் ஆராய்ச்சி மையங்கள் கொரோனா தடுப்பூசி தயாரிக்கும் ஆராய்ச்சி பணியில் ஈடுபட்டு வருகின்றன எனவும் 26 வகையிலான தடுப்பூசிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன எனவும் குறிப்பிட்டார்.

ரஷ்யாவின் நுகர்வோர் உரிமைகள் மற் றும் மனித நல்வாழ்வு கண்காணிப்புக் குழு வான ரோஸ்போட்ரெப் நாட்ஸரின் தகவல் படி 4 தடுப்பூசிகள் பாதுகாப்பானவை என நிரூபணமாகி உள்ளது என்று கூறிய பிரதமர் மிக்கைல், இரண்டு தடுப்பூசிகள் இறுதிக்கட்ட பரிசோதனையில் உள்ளன என்றும் மேலும் இரண்டு தடுப்பூசிகளின் பரிசோதனைகள் விரைவில் தொடங்கும் என்றும் தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ஷன்




# தமிழின ஆன்மாவில் ஆழமான, ஆறாத வடுவை ஏற்படுத்திய

# கறுப்பு ஜூலை!

மறக்க இயலாத பாடுகளை அனுபவித்த தமிழினம். வரலாற்றில் எவராலும் மறக்க முடியாத ஓர் நினைவு நாளாக கறுப்பு ஜூலை காணப்படுகின்றது.

ஈழத்து தமிழர்கள் மத்தியில் இந்த கறுப்பு ஜூலைதான் வரலாற்றைத் திருப்பிப்போட்டது, இனவெறி வன்முறைகளும், படுகொலைகளும், தமிழ் மக்களிடத்தில் ஆறாத காயங்களை உருவாக்கியது.

தமிழ் இனத்திற்கு விடுதலையும், நாடும், உரிமையும் தேவை என்கின்ற அவசியத்தை ஏற்படுத்தியது இந்த கறுப்பு ஜூலைதான். இலங்கைத் தீவும் ஈழமும் வெடித்து இரண்டு நிலங்கள் என்ற உணர்வும் ஏற்பட்டது. சிங்களவர்களும் தமிழர்களும் சேர்ந்து வாழ முடியாது என்கின்ற அனுபவக் கொடுமை நிகழ்ந்தது. ஈழத்தமிழ் இனவரலாற்றின் மிகப்பெரிய பயங்கரம்தான் கறுப்பு ஜூலை என்று கூறலாம்.

1983 ஆம் ஆண்டு ஜூலைக் கலவரம் என்பது 1977, 1980, 1981, 1982 ஆம் ஆண்டுகளில் வடக்குக் கிழக்கில் அரச படையினராலும், மத்திய மலைநாட்டில் சிங்கள இனவாத கும்பல்களாலும் ஒத்திகை பார்க்கப்பட்டு மாபெரும் இனக்கலவரமாக அரங்கேற்றப்பட்டது.

1983 ஜூலை 23 ஆம் திகதி தமிழின விடுதலைப் புலிகள் திருநெல்வேலிப் பகுதியில் இலங்கை இராணுவத்தை இலக்கு வைத்து தாக்குதல் ஒன்றை நடத்தியிருந்தனர். இலங்கை இராணுவத்திற்கு எதிராக சிறிய அளவிலான தாக்குதல்களை நடத்தி வந்த தமிழீழ விடுதலைப் புலிகள் முதன் முதலில் திருநெல்வேலியில் நடத்திய தாக்குதல் இராணுவத்திற்கு பெரும் இழப்பைக் கொடுத்தது. பலாலியில் இருந்த விடுதலைப் புலிகளைத் தாக்கும் திட்டத்துடன் வந்த இராணுவ அணியினரை இலக்கு வைத்து புலிகள் தாக்குதலை நடத்தினர். கண்ணிவெடித் தாக்குதலையும், துப்பாக்கிப் பிரயோகத்தையும் நடாத்தியிருந்தனர். இந்தத் தாக்குதலில் 13 இலங்கை இராணுவத்தினர் கொல்லப்பட்டார்கள். விடுதலைப்புலிகள் மேற்கொண்ட இந்த தாக்குதலையடுத்து, கொல்லப்பட்ட இராணுவத்தினரின் சடலங்கள் கொழும்பிற்கு கொண்டு செல்லப்பட்டன.

தமிழர்கள், சிங்கள மக்களை க்கொன்றுவிட்டார்கள் என்று கொதித்தெழுந்த சிங்கள காடையர்கள் கொழும்பில் தமிழர்கள் வாழ்ந்த இடங்கள் எங்கும் தேடித்தேடி அழிக்கத் தொடங்கினார்கள். தமிழினம் அழிவின் உச்சத்தைத் தொட்டிருந்தது. கொழும்பு நகரமே ஈழத் தமிழர்களின் இரத்தத்தில் நனைந்தது. தமிழர்கள் தெருத்தெருவாய் பிடித்து வெட்டப்பட்டும், அடித்தும் கொல்லப்பட்டார்கள். தமிழர்களின் வீடுகளைத் தேடிச் சென்று காடையர்கள் படுகொலைகளை அரங்கேற்றினர். கடைகளையும் அடித்து நொறுக்கினர் அத்தோடு தமிழர்களின் சொத்துக்களையும் சூறையாடினர். இலட்சக்கணக்கானவர்கள் வீடுகளையும், உடைமைகளையும் இழந்தும் உயிரைக்காப்பாற்றிக் கொள்ள அயல்நாடுகளுக்கு பெருமளவில் புலம்பெயர்ந்தும் சென்றனர். காடையர்களின் வெறி தமிழர்களை அழிப்பதிலேயே குறியாக இருந்தது. சிங்களக் காடையர்களோடு பிக்குகளும் தடிகளோடும், வாள்களோடும் தமிழர்களை தேடித் தேடி வெட்டி அவர்களின் குருதியால் நனைந்தனர்.

இந்தப் படுகொலை ஈழத்தினை மட்டுமல்ல உலகத்தினையே உலுக்கியது எனலாம். இந்தக் கலவர நாள்களில் இலங்கையின் அனைத்து இடங்களிலும் வன்முறைகள் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகள் தாக்குதலை நடாத்தியதையடுத்து ஜூலை 24, 25 ஆம் திகதிகளில் இராணுவத்தினரால் படுகொலைகள் நடாத்தப்பட்டன. திருநெல்வேலிப் பகுதியில் 51 தமிழர்கள் புலிகள் என்ற பெயரில் படுகொலை செய்யப்பட்டார்கள். வெலிக்கடைச் சிறைச்சாலையிலும் தமிழ் அரசியல் கைதிகள் கொல்லப்பட்டனர். அதுமட்டுமில்லாது சிறைகளில் இருந்த 53 தமிழ் அரசியல் கைதிகள் சக சிங்கள கைதிகளால் துன்புறுத்தி படுகொலை செய்யப்பட்டனர். ஜூலை 25 அன்று 33 கைதிகளும், ஜூலை 28 அன்று 18 கைதிகளும் படுகொலை செய்யப்பட்டார்கள். இந்தப்படுகொலையிலேயே உயிரிழந்தவர்களில் குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் போன்ற போராளிகளும் அடங்குவர். சிறைச்சாலையும் தமிழரின் இரத் தத்தில் நனைந்தது.

தமிழ்இனத்தைஅழித்தொழிக்கவும், இலங்கையில் இருந்து தமிழர்களை தூக்கி எறியவும், தமிழர்களின் அரசியலை முடக்கவும் இந்த இனப்படுகொலைகள் யாவும் திட்டமிட்டே மேற்கொள்ளப்பட்டன. இது ஓர் இன வழிப்பாகவே இடம்பெற்றிருக்கிறது எனலாம். இந்தக் கறுப்பு ஜூலையின் அரங்கேற்றமானது தமிழர் களை முடக்குவதற்கான உச்சக் கட்டம் எனலாம்.

> கொதித்தெழுந்த சிங்கள காடையர்கள் கொழும்பில் தமிழர்கள் வாழ்ந்த இடங்கள் எங்கும் தேடித்தேடி அழிக்கத் தொடங்கினார்கள். தமிழினம் அழிவின் உச்சத்தைத் தொட்டிருந்தது. கொழும்பு நகரமே ஈழத் தமிழர்களின் இரத்தத்தில் நனைந்தது.

மேலைநாட்டு வெள்ளையர்களின் கையில் இருந்து சிங்களவர்களின் கைக்கு எப்போது இலங்கை




சென்றதோ அப்போது இருந்து தமிழர்களுக்கான அரசியல் மற்றும் உரிமைகள் நிராகரிக்கப்பட்டிருந்தன. இலங்கை நாட்டிற்கு எப்போது சுதந்திரம் கிடைத்ததோ, அப்போதே தமிழர்களின் சுதந்திரம் பறிபோனது என்பதுதான் நிதர்சனமான உண்மை.

1948 இல் இலங்கை சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து தனிச் சிங்கள மொழிச் சட்டமும், பௌத்த மயமாக்கலும் பிரகடனப்படுத்தப்பட்ட வேளை தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளும், ஒடுக்குமுறைகளும் தொடங்கின். 1956 இல் ஈழத்தமிழர்களுக்கு எதிரான முதலாவது இனவெறி வன்முறைத்தாக்குதல் கல்லோயாக் குடியேற்றத்திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதில் 150 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். தனிச்சிங்கள மொழியை ஆட்சிமொழியாக அறிவித்ததைத் தொடர்ந்து தமிழ் அரசியல் தலைவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்கள் மீதும் வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டன.

1958 இல் இனக்கலவரம் வெடித்தது. பொலன்னறுவையில் தொடங்கி கொழும்புவரை நடந்த இந்த இனவெறித் தாக்குதலில் 300 தமிழர்கள் கொல்லப்பட்டனர். கத்திகளுடனும், பொல்லுகளுடனும் வந்த சிங்களக் காடையர்கள் தமிழர்களை வெட்டிக் குவித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து 1974 இல் யாழ்ப்பாணத்தில் நடந்த உலக தமிழராய்ச்சி மாநாட்டின் போது 11 பேர் இலங்கை காவற்துறையினரால் படுகொலை செய்யப்பட்டார்கள்.

1977 இல் மீண்டும் நடைபெற்ற இனவெறித் தாக்குதலில் 500 மேற்பட்டவர்கள் சிங்களவர்களால் கொல்லப்பட்டார்கள். இதில் அநுராதபுரப்பகுதியில் ரயிலுக்காக நின்ற மக்களும் வெட்டிச் சாய்த்துக் கொல்லப்பட்டார்கள்.

இதனுடைய தொடர்ச்சியான வன்முறையாகத்தான் 1981 இல் யாழ் நூல் நிலையம் எரிக்கப்பட்டது. இதில் நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

இலங்கையில் தமிழர் மீது மேற்கொள்ளளப்பட்ட படுகொலைகள், வன்முறைகள் எல்லாமே தமிழர்கள் மீதான அரசியல் உரிமை மறுப்பிற்காகவும், ஒடுக்குமுறைக்காகவுமே மேற்கொள்ளப்பட்டன.

அதனுடைய உச்சக்கட்ட வன்முறையாக நிகழ்த்தப்பட்ட கறுப்பு ஜூலை ஏற்கனவே அந்தக்காலப்பகுதியில் அப்போதைய அரசால் திட்டமிட்டமிடப்பட்டிருந்தது. திருநெல்வேலியில் விடுதலைப்புலிகளுடன் நடத்திய தாக்குதலையடுத்து எதிர்பார்க்கப்பட்ட வன்முறை அரங்கேற்றப்பட்டது.

தமிழர் தம் அரசியல் போக்கை குழப்பி, ஈழத்தமிழர்களின் உணர்வுக் கூர்மையை மழுங்கடித்து, சிங்களப் பேரினவாத ஆட்சியைத் தமிழர்களின் மீது திணிக்கவே இந்த வன்முறைகள் நடாத்தப்பட்டன என்று அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இலங்கையை ஆண்டு வந்த ஒவ்வொரு அரசும் தமிழர்கள் மீது வன்முறைகளையும், படுகொலைகளையும் திணித்து தமிழ் அரசியலை ஒடுக்குவதில் ஒரேவிதமாக செயற்பட்டன.

கறுப்பு ஜூலையுடன் தமிழர்கள் மீதான வன்முறைகள் முடிந்து போகவில்லை. வல்வை நுலகப் படுகொலை, குமுதினிப்படுகொலை, அம்பாறை உடும்பன் குளப் படுகொலை, கொக்கட்டிச்சோலைப் படுகொலை, 1987 நீலமுனைப் படுகொலை, சத்துருக்கொண்டான் படுகொலை, யாழ் நாகர் கோவில் சிறுவர் படுகொலை, நவாலி தேவாலயப் படுகொலை, களுத்துறை சிறைச்சாலைப் படுகொலை, செஞ்சோலைப் படுகொலை போன்றவைகளுடன் இராணுவ படுகொலைப் பட்டியல் மிக நீண்டது .

அத்தோடு நான்காம் ஈழப்போரில் மட்டக்களப்பு 2006 படுகொலைகள், யாழ்ப்பாணப் படுகொலைகள், வன்னி போர்ப்படுகொலைகள் 2006 – 2009 மே அதன் பின்னரான படுகொலைகளும் என ஈழத்தமிழர்களின் மீதான படுகொலைகள் தொடர்ந்தன. தமிழர்களுக்கு அவர்களது நிலங்கள் தேவைகள் என்பதையும், உரிமைகள் தேவை என்பதையும் கறுப்பு ஜூலையினால் ஏற்பட்ட துயரம் வலிமையாகவும், ஆழமாகவும் மறைந்திருக்கின்றது. 37 வருடங்களைக் கடந்தாலும் தமிழர்களின் மனதில் ஆழமாக பதிந்து மாறாதா வடுக்களாக உள்ளது கறுப்பு ஜூலை என்பது நிதர்சனமான உண்மையாகும்.

சமூகவியல் துறை
கிழக்குப்பல்கலைக்கழகம்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இன்று ஜூலை 23 ஆம் திகதி

இலங்கை தீவின் வரலாற்றில் தமிழர்களின் செங்குருதிக் கறை படிந்த நாள்களில் 1983 ஜுலை 23ஆம் நாள் முக்கியமானது.



புத்தரின் போதனைகளை கடைப்பிடிப்பவர்கள் என்று கூறிக் கொள்வோர் அன்று தென்னிலங்கையில் ஒருகையில் வாக்காளர் பட்டியலையும் மறுகையில் கத்திகள், கோடரிகள், வாள்கள் என்பவற்றுடன் வீடு வீடாகச் சென்று தமிழர்களை வெட்டியும் எரித்தும் கொன்றொழித்த நாள். தமிழர்களின் உடைமைகளைத் தீயிட்டும் சூறையாடியும் சிங்கள பௌத்த பேரினவாதம் தாண்டவமாட வழிவிடப்பட்ட நாள். விடுதலை வீரன் குட்டிமணி தனக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டால் தனது கண்களைத் தானம் அளிக்கும்படியும் அப்போது மலரப்போகும் தமிழீழத்தைத் தனது கண்கள் காணும் என்று கூறியதற்காக வெலிக்கடைச் சிறைச்சாலையில் சிங்களக் காடையர்களால் அவரின் கண்கள் பிடுங்கப்பட்ட நாள்.

## 1983 ஜுலைக் கலவரச் சூழலை

## ஒத்த கால கட்டம்தான் இன்று!

குட்டிமணியுடன் தங்கதுரை உட்பட சிறையிலிருந்த 53 அரசியற் கைதிகள் கொடூரமாகக் கொன்றொழிக்கப்பட்ட நாள்.

தமிழ் மக்களுக்கெதிராக நிறுவனப்படுத்தப்பட்ட தொடர் இனக்கலவரங்களான 1956,1958, 1977, 1981 வன்முறைகளின் உச்சகட்டமாக இன அழிப்பு நடைபெற்ற ஏழு நாள்களின் தொடக்கநாள்.

1983 ஆம் ஆண்டு ஜுலைக் கலவரத்தில் வன்முறைகளில் சுமார் 3000 க்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர். பல்லாயிரக்கணக்கானவர்கள் அகதிகளாக்கப்பட்டனர். தெற்கில் எஞ்சியிருந்த தமிழர்கள் வடக்கு – கிழக்கு தமிழர் தாயகத்துக்கு விரட்டப்பட்டார்கள்.

## ஆடிக் கலவர நினைவழியா வாரம் ஆரம்பம்

> “இன்று நிலவும் சூழ்நிலையும், 1983 இல் இருந்த சூழ்நிலையும் ஒரே விதமாகவே காணப்படுகின்றன. 1978 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையூடாக சிங்கள, பௌத்த பேரினவாதம் திரட்சி பெற்று காணப்பட்டமையே அன்றைய இனக்கலவரத்துக்கு வழி கோலியது.”

நான் அப்போது மல்லாகம் மாவட்ட நீதிபதியாகவும் நீதிவானாகவும் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். அப்போது மானிப்பாய் போன்ற இடங்கள் ஊடாக இராணுவ வாகனங்களில் வந்தோர் வீதியில் கண்ட மக்களை வகை தொகையில்லாமல் சுட்டுச் சென்றமை சம்பந்தமாக மரண விசாரணைகள் நடத்த எவரும் முன்வராத நிலையில் நான் நடத்தியமை இப்போதும் மனதில் ஆழப்பதிந்திருக்கின்றன. அவ்வாறு நடத்தியமையால் ஜனாதிபதி ஜே.ஆரின் சகோதரரான ஜனாதிபதி சட்டத்தரணி எச்.டபிள்யூ. ஜயவர்தன அவர்களின் கோபத்திற்கு ஆளானேன்.



இந்த உச்சகட்ட மிலேச்சத்தனமான அடக்குமுறை தான் எமது இளைஞர்களை முழு அளவிலான ஆயுதப்போராட்டத்துக்கு நிர்ப்பந்தித்து, வடக்கு கிழக்கில் ஒரு நிழல் அரசை உருவாக்குவதற்கு வழிகோலியது. பல்லாயிரக்கணக்கான எமது மக்களை இனப்படுகொலைக்கு உட்படுத்தி இந்த நிழல் அரசும் 2009 ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

இவை எல்லாமே சிங்கள பௌத்த பேரினவாத மேலாண்மையை நாடு முழுவதும் நிலைநிறுத்துவதற்காக தொடர்ந்து வந்த அரசாங்கங்களால் காலம் காலமாக நன்கு திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்ட இனப்படுகொலை நிகழ்வுகளாகும்.

இதனை வட மாகாண சபையின் ஊடாக எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஓர் இனவழிப்பு ஆவணமாக உருவாக்கி சர்வதேச விசாரணைக்கான எமது போராட்டத்தைப் பலப்படுத்தியுள்ளேன்.

இன்று நிலவும் சூழ்நிலையும், 1983 இல் இருந்த சூழ்நிலையும் ஒரே விதமாகவே காணப்படுகின்றன. 1978 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையூடாக சிங்கள, பௌத்த பேரினவாதம் திரட்சி பெற்று காணப்பட்டமையே அன்றைய இனக்கலவரத்துக்கு வழி கோலியது. அதேபோல, இன்றும் அதே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி தெரிவுக்காக கடந்த வருடம் நடைபெற்ற தேர்தலின் ஊடாக சிங்கள, பௌத்த பேரினவாதம் மீண்டும் திரட்சி பெற்றுக் காணப்படுகின்றது. சிங்கள, பௌத்த துறவிகள் எதற்கெடுத்தாலும் இரத்த ஆறு ஓடும் என்று அச்சுறுத்துவது மீண்டும் எம் மீதோ அல்லது எமது முஸ்லிம் சகோதரர்களின் மீதோ எவ்வேளையும் ஒரு தாக்குதல் நடைபெறலாம் என்பதையே கட்டியம் கூறி நிற்கின்றது.

எனதருமை மக்களே! இலங்கை அரசுடன் பேசுவதாலோ அல்லது இலங்கைக்குள் பேசுவதாலோ, எமக்கான உரிமையை நாம் என்றுமே பெற்றுவிட முடியாது என்பதையே வரலாறு எமக்கு இடித்துரைக்கின்றது. எமது மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைக்கான சர்வதேச விசாரணை ஒன்றின் மூலமான பரிகார நீதிக்கூடாகவே எமது உரிமைகளை நாம் அடைய முடியும்.

இதற்கு நேர்மை, விலைபோகாத் தலைமை, அர்ப்பணிப்பு ஆகியவற்றுடன் நிறுவன ரீதியான செயற்பாடுகளே அவசியமாக இருக்கின்றன. இதற்கான ஓர் அடித்தளத்தை இடுவது எமது எதிர்கால அரசியல் செயற்பாடுகளில் முக்கியமானதாக இருக்கும். இதற்கான முழுமையான ஒத்துழைப்பை நிலத்திலும் புலத்திலும் உள்ள மக்களிடம் நாம் வேண்டுகின்றோம்.

இன்றைய இந்த நாளில் 1983 ஆம் ஆண்டு கலவரத்தில் படுகொலைசெய்யப்பட்ட அனைத்து மக்களுக்கும் எமது அஞ்சலிகளை செலுத்துவதுடன் எமது எதிர்கால சந்ததியினர் வளமான, பாதுகாப்பான வடக்கு – கிழக்கு தமிழர் தாயகத்தில் தம்மைத் தாமே ஆளும் உரிமைகளுடன் வாழ வழிசெய்யும்வகையில் அர்ப்பணிப்புடன் செயலாற்ற இன்று உறுதிபூணுவோமாக.


**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
**(முன்னாள் முதலமைச்சர் - வடமாகாணம்;**
**இணைத்தலைவர் - தமிழ் மக்கள் பேரவை;**
**செயலாளர் நாயகம் - தமிழ் மக்கள் கூட்டணி;**
**தலைவர் - தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி)**

# “72 வருட தமிழினப்படுகொலை’

# பிரான்ஸில் நினைவுநாள் நிகழ்வு





’72 வருட தமிழினப்படுகொலை’ என்ற தலைப்பில் பிரான்ஸ் நெவேர் இளையோர்களால் நடத்தப்பட்டு வரும் கண்காட்சியை பெருந்தொகையான மக்கள் பார்வையிட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 20ஆம் திகதி ஜூலை முதல் எதிர்வரும் சனிக்கிழமை 25ஆம் திகதி வரை ‘72 வருட தமிழினப்படுகொலை’ என்ற தலைப்பில் பிரான்ஸ் நெவேர் இளையோர்களால் கண்காட்சியொன்று நடத்தப்பட்டு வருகிறது.

‘தமிழர் இயக்கம்’ ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில் பெருந்தொகையான இளையோர் பங்கேற்றுள்ளனர்.

இந்த நிலையில், இலங்கையில் யுத்தத்தின்போது இடம்பெற்ற படங்களைக் கண்ட பிரஞ்சு மக்கள் உடனடியாகவே தமிழின அழிப்பிற்கு எதிராக நீதி கேட்கும் கோரிக்கையில் கையொப்பம் இட்டுத் தங்களது ஆதரவுகளை வழங்கினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மனோகணேசனை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டியது தமிழர்களின் கடமை

## கூட்டமைப்பின் சிறீதரன் பகிரங்கக் கோரிக்கை





ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் என்ற தொழிற்சங்கத்தின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசனை நாடாளுமன்றம் அனுப்ப வேண்டியது கொழும்பு மாவட்ட தமிழர்களின் கடமை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வேட்பாளருமான சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இன்றைய தினம் தாம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலையே அவர் அவ்வாறு தெரிவித்துள்ளார். அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை:-

வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பகுதிகளில் தமிழர்கள் செறிந்து வாழ்வதனால் அவர்கள் தமிழ்க் கட்சிகளைப் பிரதிநித்துவப்படுத்துகின்ற தமிழ் வேட்பாளர்களுக்கே வாக்களிப்பார்கள். ஆனால் கொழும்பு மாவட்ட நிலைவரம் அவ்வாறானது அல்ல. இதற்கு நேர் மாறானது. காரணம் இலங்கையில் உள்ள அனைத்து இன மக்களும் வாழுகின்ற மாவட்டம். அங்கு வசிக்கின்ற சிங்கள மக்கள் சிங்கள தேசியக் கட்சிகளுக்கே தமது வாக்குக்களை வழங்குவார்கள். ஆகவே அங்கு இருக்கின்ற தமிழர்கள் தமது வாக்குகளை சிதறடிக்காது தமது விருப்பு வாக்குகளை மனோகணேசன் அவர்களுக்கு வழங்கி கடந்த நாடாளுமன்ற தேர்தலில் கொடுத்த ஆணையை விட பல மடங்கான ஆணையை வழங்க வேண்டிய கடமை உள்ளது. இந்த ஜன நாயகக் கடமையை இந்த காலத்தின் கட்டளையை கொழும்பு மாவட்டத்தில் வாழும் தமிழர்கள் நிறைவேற்றுவார்கள் என நம்புகின்றேன்.

இலங்கையில் உள்ள தமிழர்கள் பாதிப்பிற்கு உள்ளாகும் போது அல்லது அவர்களுக்கு அநீதி இழைக்கப்படும் போது குரல் கொடுக்கின்ற ஒரு மனிதநேய வாதியாகவே மனோ கணேசன் அவர்களைப் பார்க்கின்றேன். தமிழர் தரப்பு நியாயங்களையும் சிங்கள பேரினவாத அரசின் போலிப் பிரசாரங்களையும் தகர்த்து அதன் உண்மைத் தன்மைகளை சிங்கள மக்களுக்கு வழங்கக் கூடிய பேச்சாற்றல் மற்றும் மொழியாற்றல் உள்ள தமிழ் அரசியல்வாதிகளில் இவரும் ஒருவர். ஆகவே இவ்வாறானவர்கள் என்றுமே தவிர்க்கப்பட முடியாதவர்கள் என்ற உண்மையைக் கொழும்பு மாவட்ட தமிழர்கள் புரிந்து அவரை மீண்டும் நாடாளுமன்றம் அனுப்ப செயற்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும் நாம் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும். நாடு ஓர் இராணுவ ஆட்சியை நோக்கி நகர்ந்து கொண்டுள்ளதனை அனைவரும் அறிகின்றோம். பார்கின்றோம். இந்த நிலையில் தமிழர்களின் இருப்பைத் தக்க வைக்க, தமிழர்கள் தங்களின் அடையாளங்களுடன் வாழ, அனைத்துப் பகுதிகளிலும் தமிழர் நலன்களுக்காக உருவாக்கப்பட்ட நலன்களுக்காக செயற்படுகின்ற தமிழ் அரசியற் கட்சிகள் மற்றும் தமிழர்கள் ஒன்றாகப் பயணிக்க வேண்டிய சந்தர்ப்பத்தை காலம் உருவாக்கி உள்ளது. காலத்தின் கட்டளையை ஏற்று ஒரே திசையில் ஓர் இலக்கு நோக்கி பயணிக்க தயாராவோம். - என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது

## கதிர்காமம் அன்னதானம் இம்முறை நிறுத்தப்பட்டது

கொழும்பு, ஜூலை 23

கதிர்காம ஆடிவேல் விழாவையொட்டி அங்கு கடந்த 17 வருட காலமாக நடத்தப்பட்டு வந்த அன்னதானம் இம்முறை நிறுத்தப்பட்டுள்ளதாக அன்னதான சபையின் இணைப்பாளர் எஸ்.ஞானசுந்தரம் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைக் கருத்திற்கொண்டு இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்

கடந்த 17 வருடகாலமாக இந்து கலாசார திணைக்களத்தின் கதிர்காம இந்துயாத்திரிகர் விடுதியில் சிவபூமி அன்னதான தொண்டர் சபையினரால் அன்னதானம் சிறப்பாக நடைபெற்றுவந்தமையோடு, அதில் பல இலட்சக்கணக்கான பக்த அடியார்கள் பசியாறிவந்தனர்.

ஆனால் இம் முறை அதனை நடத்தக் கூடிய சூழ்நிலை இல்லை என்பதால், அதனை நிறுத்துவ தற்குத் தீர்மானிக்கப்பட்டதாக இணைப்பாளர் எஸ்.ஞானசுந்தரம் தெரிவித்தார்.

இதேவேளை, இந்து யாத்திரீகர் விடுதியும் இம்முறை பக்தர்களுக்கு அல்லாமல் கொரோனாத் தடுப்பு அலுவலர்கள் தங்குவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேபோல் கதிர்காமம் மற்றும் உகந்த மலை முருகனாலய ஆடிவேல் விழாக் காலங்களில் மேற்கொள்ளப்படும் வழமையான விசேட போக்குவரத்து ஒழுங்குகள் நாட்டின் கொரோனா கட்டுப்பாடுகள் காரணமாக மேற்கொள்ளப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.



## அபூர்வமான வெள்ளை மறை மான்

மத்திய மாகாண வனப் பகுதியில் அபூர்வ இனமான வெள்ளை மறை மான் ஒன்று சுற்றாடல் ஆர்வலர் ஒருவரின் கண்ணில் சிக்கியுள்ளது.

பலவருடங்களுக்கு முன்னர் பிட்டவலதென்ன என்ற காட்டுப் பகுதியில் வெள்ளை மறை மான் ஒன்று இருக்கின்றது எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும், தற்போது அவதானிக்கப்பட்டுள்ள மறை மான் மலையகத்தின் வேறு ஒரு பகுதியில் கண்டறியப்பட்டுள்ளது.

காட்டுப் பகுதியில் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வரும் நேரத்தில், இந்த வெள்ளை மறை மானைக் கண்டு அதனைப் புகைப்படம் எடுத்துள்ளேன். அது குறித்து தொடர்ந்தும் ஆராய்ந்து வருகின்றேன் என்று சுற்றாடல் ஆய்வாளரான கே.பி.லசித சுரங்க தெரிவித்துள்ளார்.

## அங்கொட லொக்கா உயிரிழந்து விட்டார்?




பாதாள உலகக்கோஷ்டி ஒன்றின் உறுப்பினரான அங்கொட லொக்கா உயிரிழந்துவிட்டார் எனப் பத்திரிகை ஒன்றில் வெளியாகியிருக்கும் செய்திகள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அங்கொட லொக்கா இந்தியாவில் வைத்து கொல்லப்பட்டார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## மேலும் 15 பேருக்கு கொரோனா; தொற்றாளர் எண்ணிக்கை 2,745

இலங்கையில் மேலும் 15 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சவூதி அரேபியாவிலிருந்து நாடு திரும்பிய 14 பேரும், கந்தக்காடு போதைப்பொருள் தடுப்பு புனர்வாழ்வு மத்திய நிலையத் தொற்றாளருடன் தொடர்பைப் பேணிய ஒருவருக்குமே நேற்று கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 2,745 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 2064 பேர் குணமடைந்துள்ளனர். 670 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, 107 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் வைத்தியசாலைகளில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் கொரோனாத் தொற்றால் இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிறப்புச் சான்றிதழில் இனம் பற்றி குறிப்பிடுவதை நீக்கவே கூடாதாம்

### மஹிந்த உத்தரவிட்டுள்ளார் என்று விமல் கூறுகின்றார்

புதிய பிறப்புச் சான்றிதழ்களில் இனம் குறித்து குறிப்பிடப்படுவதை நீக்கும் நடவடிக்கையை உடன் கைவிடுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார் என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் புதிய பிறப்புச்சான்றிதழ்களில் இனத்தைக் குறிப்பிடாமல் இலங்கையர்கள் என மாத்திரம் குறிப்பிடவுள்ளது என அறிவிப்பு வெளியாகியிருந்தது.

விண்ணப்பப்படிவத்திலும் இனம் குறித்த கேள்விகள் நீக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். இதேவேளை, நேற்று தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய விமல் வீரவன்ஸ இதனைக் கடுமையாக எதிர்த்திருந்தார். தற்போதைய அரசு இதற்கு ஒருபோதும் இடமளிக்காது எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

## உரிய ஆசிரியர் மட்டும் வருகை தந்தால் போதும்

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மீள ஆரம்பிக்கப்படும் 11, 12, 13ஆம் தரங்களில் உள்ள வகுப்புகளுக்கு பிற்பகல் 3.30 மணி வரை கற்பித்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த வகுப்புகளுடன் தொடர்புடைய ஆசிரியர்களைத் தவிர, ஏனைய ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு சமூகமளிக்கத்தேவையில்லையென்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை இன்று (23) அல்லது நாளை (24) வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தரம் 11, 12, 13 மாணவர்களுக்கு மாத்திரமே எதிர்வரும் திங்கட்கிழமை (27) பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஏனைய தரங்களில் உள்ள மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை எதிர்வரும் ஆகஸ்ட் 10ஆம் திகதி முதல் முன்னெடுக்கக் கல்வி அமைச்சு ஏற்கனவே தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.07.2020 இல் வெளியிடப்பெற்றது.